Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. சனி வெளியீடு.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0. வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 1-12-1945 கார்த்திகை மீ 16உ { மலர் 8

## சாமியாடுதல்

‡

(M. S. எழுதியது)

குடங்களைச்சிங்காரித்து அவைகளை தலைமேலேந்திக்கொண்டு அதற்குக் "கரகம்" எனப் பெயரிட்டுத் தெருக்களில் ஆடித்திரியும் வேடிக்கையை நமது நாட்டில் அன்றாடம் பார்க்கலாம். அதனுடன் "தெய்வம்" ஆடுவதுமுண்டு. தெய்வம் ஆடுவதென்றால் ஒரு புருஷனோ, பெண்ணோ தன்மேல் "சாமி" வந்ததாகச் சாதாரண ஸ்மரணையை மறந்து, வேறுவிதமாகப் பேசுவதும் ஆடுவதுமான காட்சி. "சாமி ஆடல்" அல்லது "தெய்வமாடல்" என வழங்கும். இவ்விதமாக சில மனிதர்கள் நடிப்பதை பெஞ்ஞானத்தில் (Artificial Hysteria) அதாவது தானே வரவழைத்துக்கொண்ட ஓர்வித வெறி என்பார். சாதாரண Hysteria வில் மூர்ச்சை அடக்கி வலிவருவதுண்டு. காக்காய் வலி என்ற நோவும் இந்த நரம்பு நோயைப் பற்றியதே. அதே மாதிரியாகவே ஒருவன் தானாகவே இவ்வித வலியைத்தான் நமது நாட்டுப் பாமர ஜனங்கள் "சாமி ஆடுகிறது" "சாமி பேசுகிறது" "சாமி மூர்ச்சித்தது" "சாமி மலைசாய்ந்துவிட்டது" என்று பயபக்தியோடு சொல்கின்றனர். இந்த வலியை வரவழைத்துக் கொள்வதற்குத் தகுந்த ஆடம்பரங்கள் செய்வதுண்டு. உடுக்கை. சிலம்பு, கரகம், வேப்பிலை,மேளம்,தாளம், விபூதி,மணி முதலிய Accompaniments ஆடம்பரங்கள் கூடவே இருக்கின்றன. இத்தியாதி ஆடம்பரத்தில் சில நரம்பு வியாதியுடையோர் எளிதில் ஓர்வித மயக்கம் (trance) அடைகின்றனர். இவ்வித வலியில் Excitement விழுந்தோரை ஆயிரக்கணக்காக பார்க்க வேண்டுமானால் அல்லாசாமிப் பண்டிகையில் 'ஆலி' 'ஜூலா' என்ற சப்தத்திற்கு ஏற்றவாறு சிறிய பையன்களும் (Work themselves into Hysteria) இந்த மயக்கத்தை வரவழைத்துக் கொள்கின்றனர். அவர்கள் மேல் மஞ்சள் சாம்பிராணி தூளை வாரிவாரி எறிகின்றனர். அல்லாசாமி கோஷ்டத்தில் யாருக்குத்தான் இவ்வித வலியுண்டாகாமல் இருக்கும்? ஒருவனைப் பார்க்கமற்றொருவனுக்குத் தொத்து வியாதியைப்போல் (Infectious disease) இந்த 'வலி' தொத்திக் கொள்வதுண்டு. அதே மாதிரியாகவே இந்தப் பண்டிகையில் மாரடித்துக் கொள்ளும் பயங்கரமான காட்சியொன்றுண்டு. மூடநம்பிக்கையால் தங்களை மறந்து (Religious excitement) மதவெறியால் தூண்டப்பட்டு, இரத்தம் ஒழுக மாரை அடித்துக்கொள்ளுகின்றனர். ஒருவன் தானே கோபத்தைவரவழைத்துக்கொண்டு தன்னையே அடித்துக் கொள்ளும் பாவனையை யொத்தது இவ்வித 'தெய்வ மாடலும்' 'சாமி ஆடலும்' மாரடித்துக் கொள்ளலும் என அறிக. இந்விபரீத (Abnormal) நிலைமையில் உளறும் சொற்களை தெய்வவாக்கென நம்புகின்றார்கள்.

உண்மையாகவே ஒருவனுக்கு ஜன்னி நோய் பிறந்தால் தாறுமாறாக அவன் உளறுவான். இவ்வித உளறலை பேயின் வாக்கெனக் கொள்ளுவதுமுண்டு. காட்டுமிராண்டி நிலைமையில் நிற்கும் கூட்டங்களில் ஜன்னி கண்டவனை அடித்துக் கொன்றுமிருக்கிறார்கள். அதனால் தானே 'ஜன்னி'யை உண்டாக்கிக் கொண்டு உடுக்கை, சிலம்புகளுக்குத் தக்கபடி ஆடிக்கொண்டு தாறுமாறாக உளறுவானேயாகில் அதனைத் தெய்வவாக்காகக் கருதி அதன்படி நடக்க எத்தனிக்கின்றார்கள். 'அம்மா ஆடு கேட்கின்றாள், என்றால் ஆடுகளைக் காவு இடுகின்றார்கள் 'கோழி கேட்கின்றாள்' என்றால் கோழி காவு கொடுக்கின்றார்கள். இவ்விதமாக சில கொடூர செய்கைகளையும் 'அம்மா' சொன்னாளெனவும், 'சாமி' சொல்லிற்றெனவும் நம்பி செய்து விடுகிறார்கள். இத்தியாதி கொடிய மூடநம்பிக்கையால் சில இடங்களில் கொலைகளும் நடந்திருப்பதைப் படிக்கின்றோம். நான் இருக்கும் மீன்பிடிக்கும் குப்பத்தில் 40-வருஷத்திற்கு முன்பு எங்கள் பந்துக்களில் ஒரு பெண்ணானவள் பிள்ளை பெற்ற பிறகு சரியான சிகிச்சையின்றி ஜன்னி (Tetanus) பிறக்கவும் அவளுக்குப் பேய் பிடித்துக்கொண்டதென்று 'தெய்வம் வந்தவள்' சொன்னதாக செருப்பாலும் முறத்தாலும் அந்த நோயாளியை அடித்துக்கொன்றார்கள். அதே மாதிரியாகவே நோயில் மெலிந்த பெண்களை 'தெய்வம்' ஆடுகின்றவள் சொல்லைக்கேட்டு கடலில் முழுக வைப்பதும் 'தெய்வம் ஆட' வைப்பதும், அடி தண்டமிட்டு நடக்கச் சொல்வதும், உடுக்கை சிலம்புடன் வெகுதூரம் நடந்து பிரார்த்தனை செலுத்துவதுமான

கொடுமையான வேலைகளைச் செய்யச் சொன்னதின் பயனாக எத்தனை சிறுபெண்கள் மாண்டனர்! இத்தியாதி கொடிய பழக்கங்கள் மூடபக்தியால் நேரிடுவதைக் கண்டறிந்து அதனைப் போக்கும் நல்ல வழிகளைத் தேடாமல் 'சிவ சிவ' என்று முணுமுணுப்பதும் 'ஆன்மா' உண்டா என்று வீண் வாதமிடுவதும் 'கர்மம்' உண்டா என்று வாதிப்பது மானபயனற்ற செயல்களைச் செய்து காலம் கழிப்பதா மானுஷீகமெனக் கேட்கின்றேன்.

சைவகூட்டங்களிலும், வைணவ கோஷ்டியிலும், காலட்சேபங்களிலும், கிறிஸ்துவ சபைகளிலும், புத்த கூட்டங்களிலும் நமது புத்திக்கு எட்டாத கற்பனைகளைப் பற்றிப் பேசி வாதித்து வீண் காலத்தைக் கழிக்கின்றனரே ஒழியமற்றபடி உயிரை இவ்வுலகில் வீணே மடியாமல் செய்வதற்கு வேண்டிய பரிகாரங்களைத் தேடி உழைக்காத காட்சியைக் காண மனம் புண்படுகிறது.

துர்ப்பழக்கங்களால் மடியும் மக்களுக்கு நமது நாட்டில் கணக்கே இல்லை. எத்தனை குடும்பங்கள் இத்தியாதி மூட நம்பிக்கையால் நாசமடைந்தன! காட்டுமிராண்டிப் பழக்கங்கள் (Savage Practices) நாகரீகமற்ற வழக்கங்கள் (Barbarous Customs) உலகமெங்கும் அங்குமிங்கும் பரவி இருந்தபோதிலும், நமது இந்திய நாட்டில் மாத்திரம் இக்கொடிய மூடப்பழக்கவழக்கங்கள் அதிகமாக நிறைந்துள்ளன. அரசாங்கமும் இம்மூட வழக்கங்களுக்கு ஜாடையாகவே இருந்து வருகின்றது. கடுமையான சட்ட திட்டங்களால் இம்மகா பாதகங்களைத் தடுப்பதைக் காணோம். இதற்கொரு காரணமுண்டு. அது யாதெனில் இம் மூடப்பழக்கங்களை மதச் சார்பாக அனுஷ்டித்து வருவதால் மத நடு நிலைமை (Religious Neutrality) என்ற மூடத் திட்டத்திற்கு விரோதமாகாமல் பார்க்கின்றனர். 'சதி' (Suttee) என்னும் துர்ப்பழக்கத்தைச் சட்ட திட்டத்தால் நிறுத்தினார்கள். (அதாவது உடன்கட்டை ஏறுவதை சென்ற 100-வருஷத்திற்கு முன்பே தடுக்கப்பட்டது) என்பதையும், விஷம் உண்ணுவதையும், கரகமாடுவதையும், குறி சொல்லுவதையும், கைபார்ப்பதையும், 'ஆவி ஜாலா' வென்று மூர்ச்சித்துப் போவதையும், மந்திர தந்திரங்கள் செய்வதையும், பில்லீ சூனியம் வைப்பதையும் (Witch-craft) நல்ல சகுனம், கெட்ட சகுனமென்பதையும் சட்ட திட்டங்களால் நிறுத்தலாகாது? உடன்கட்டை ஏறிமடிவது ஏகதேசம், ஆனால் சரியான சிகிச்சையின்றி இந்தக் 'கும்பம்' போடுவதினாலும், தெய்வமாடுவதினாலும், மந்திரம் செய்வதினாலும் மடியும் ஏழை மக்கள் ஆயிரக்கணக்கென்று சொல்லலாம்! இதனைத் தடுப்பார் இவ்வுலகில் (இந்தியாவில்) யாருமில்லையா? சுயமரியாதையோருக்கு இதைவிட முக்கிய வேலை என்ன இருக்கிறது?

# தீபாவளி கொண்டாடாத தீரர்கள்

## இதுவரை 6018 தோழர்கள்!

(சென்றவாரம்வரை 5000 பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இடமின்மையாலும், பலர் கையெழுத்துக்கள் கண்டு பிடிக்க முடியாமலிருப்பதாலும் சுமார் 1000 தோழர்களின் பெயர்கள் மட்டுமே இந்தவாரம் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்கள், இவர்கள்!)

**பெங்களூர்:**

பி வேலாயுதம் பி குள்ளப்பா பி எம் அப்பாதுரை வி பாலகிருஷ்ணன் முனுசாமி எம் சின்னப்பன் பி முனுசாமி என் ராஜி எஸ் அய்யாக்கண்ணு டி ஏ சே சாமி பி ஆர் பெருமாள் பெ கி பெருமாள் ஆ வி டிகாராம் பி இருச்சப்பன் எஸ் பெருமாள் எஸ் பெருமாள் ஆர் சுந்தரேசன் ஆர் கே குப்புசாமி வி ராஜி கே குழந்தை எம் சேஷாஜலம் பி கணேசன் எம் குப்புசாமி பி கிருஷ்ணசாமி கோபால் எம் பெரியப்பா முனுசாமி டி வி சங்கரர் எம் நடேசன் ராஜி எத்துராஜி ஏ எல் ராமதேவ் சி ரெங்கசாமி சி ஜெகநாதன் எம் மாசிலாமணி கே அனுமந்து முனுசாமி அல்லிமுத்து பி ஆரோக்கியசாமி பி நல்லதம்பி ஜெகநாதன் எஸ் ஆர் பெருமாள் ஏ வேணுகோபால் வி ஏகாம்பரம் பி கிருஷ்ணன் கண்ணன் எம் வரதராஜி எம் கோவிந்து ஏ விநாயகம் சுந்தரேசன் வா மா போ சாமி சாமிநாதன் நா மாணிக்கம் கோவிந்தன் சுத்தானந்தம் க கு காந்தாராம் சி வேணுகோபால் எஸ் பெருமாள் எம் குமார் கே பொன்னுசாமி எம் வெங்கடேசன் பூங்காவனம் பி எம் துரைசாமி.

**உறையூர்:**

வி வீராசாமி பி. ஏ., கே பொன்னன் பி. ஏ., ஏ பெரியசாமி பி. ஏ. பி கந்தசாமி பி. ஏ., பி காந்தமல்லி பி. ஏ., பி ராமசாமி பி. ஏ., வ தர்மராஜ் எஸ் சண்முகசுந்தரம் எஸ் முத்துவேல் டி ஏ சண்முகம் எஸ் நல்லசெல்வன் ஆர் கே ராமசாமி பி எஸ் சின்னசாமி ஏ சாமிநாதன் ஆர் ராஜாராம் பி ஏ தங்கமுத்து டி துரைசாமி ஏ துரைராசு ஏ செங்கமலம் அழகிரிசாமி பி என் சீனிவாசன் பி. ஏ.

**செய்யாத்துவில்லான்:**

ஏ இராமலிங்கம் ஆர் ஜனகம் வி ஆர் விஜயன் வி ஆர் கண்ணன் எல் டி பரமாத்மா ஆர் வாசுதேவன் ஏ சுப்ரமணியன் பி பாண்டுரங்கன் பாலசுப்ரமணியன் ல வெங்கிடாசலம்.

**அண்ணாமலைநகர்:**

இரா இளம்வழுதி இரா மு கோவிந்தராசன் விஸ்வநாதன் அரவாசன் பாலக்கிருட்டினன் முருகேசன் மருதவாணன் கி மணி மதியழகன் ராசகோபலன் நாராயணசாமி சீனிவாசன் பாண்டுரங்கன்.

**காரைக்குடி:**

வே செளந்திரபாண்டியன் ரா ராஜாம சுப்பையா பெரியசாமி பெ ஆறுமுகசாமி ராமசாமி ர கோபாலகிருஷ்ணன் சுப்பையா எஸ் பி விசாலாட்சி முத்துராமன் சே வி நடராசன் லெ நாராயணன் ஆர். பேராண்டாள் ஆ மருதமுத்து சி கருப்பையா ஆறுமுகம்.

**நீவி:**

ஏ. எம். சிங்காரம் பி எம் சின்னையன் எம் எம் முத்து தா இராமசாமி டி ஆர் அன்பரசன் டி பழனி சே கோவிந்தராசு எம் பி சாமி ஏ எம் கிட்டு என் எம் தங்கவேலு ஜி கண்ணன் அண்ணாமலை ஏ என் உத்திராபதி.

**இளங்காடு**

ரா சிங்கப் பெருமாள் சி அரவிந்தவல்லி ஆ மதிழ்நன் சு முத்துவீரன் தமிழன்பன் வீ முருகையன் எஸ் கூத்தரசன் வி வேணுகோபால் ஜி அப்பராசன் ச தாமரைக்கண்ணி அ தமிழரசி ஜி எஸ் வரசன் ர சின்னமணி தி மனோரஞ்சிதம் க இளவழகன் ப குலவாணன் ம நாகராசன் பி முத்துசாமி நா வரதராசன் கே பாலதண்டாயுதபாணி ஆறுமுகம் ஈ டி ஆறுமுகம் ஆர் சீனிவாசன் எம் சுப்பையன் எம் துரைராஜன் எம் நல்லயன் ஆர் திருநாவுக்காசன் என அண்ணாதுரை வே ராமசாமி நா

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# எஸ்கிமோ ஜாதியாரின் பழக்கம்

பாதிரி அர்லனே அர்தவிடில், வடக்கு கானடாவில் பனிக்கட்டி உறைந்து கிடக்கும் பிரதேசத்திலுள்ள எஸ்கிமோ ஜாதியினரிடம் நெருங்கிய பழக்கமுள்ளவர். அவர் எஸ்கிமோ ஜாதியினரின் மனோபாவத்தைக் குறித்தும், அவர்களுடைய பழக்கவழக்கங்களைக் குறித்தும் கீழ்வருமாறு கூறுகிறார்:-

இறந்ததும் சுவர்க்கத்திற்குப் போவதைவிட, நரகத்திற்குப் போவதே சிறந்ததென்று எஸ்கிமோ ஜாதியார் கூறுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர்கள் நரகத்தைப் பற்றிப் பார்க்கும் படங்களின் மூலம், நெருப்பும் உஷ்ணமும் நரகத்தில் அதிகமாயிருக்குமென்பது தான். இப்பிறப்பில் அவர்கள் குளிரில் அவஸ்தைப்படுகிறார்கள். ஆகையாலேயே சுவர்க்கத்தைவிட உஷ்ணம் மிகுந்த நரகமே மேலென்று கருதுகிறார்கள்.

### கடவுளிடம் அவநம்பிக்கை

கடவுள் அன்பு நிறைந்தவரென்று கூறினால் எஸ்கிமோ ஜாதியினர் நம்புவதில்லை. ஏனெனில் இயற்கையில் எத்தகைய அன்பையும் அவர்கள் கண்டதில்லை. பிறந்தது முதல் இறக்கும் வரையில் குளிரின் கொடுமையையும், உணவு தேடப்படும் கஷ்டத்தையுமே காண்கிறார்கள். கடவுளுக்கு தங்களிடம் அன்பிருக்குமாகில், இக்கஷ்டம் தங்களுக்கு ஏனிருக்க வேண்டுமென்கிறார்கள்.

எஸ்கிமோ ஜாதியினர் மனைவிகளைப் பரிவர்த்தனை செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் வெள்ளைக்காரர்களில் அநேகருடைய ஒழுக்கத்தைவிட, இவர்கள் ஒழுக்கம் சிறந்ததென்றே கூற வேண்டும்.

### மனைவிக்குப் புது புருஷன்

ஒரு எஸ்கிமோ வேடர், தன் மனைவியை மற்றொருவரிடம் ஒப்புவிக்கிறார். பிறகு அவர் வேட்டைக்குப் போகிறார். இம்மனைவி தன் புருஷன் வேட்டையிலிருந்து வரும் வரையில், தன்னை ஒப்படைக்கப்பட்டவருடன் புருஷன் மனைவியாக வாழ்கிறாள். ஆனால் புருஷன் வேட்டையிலிருந்து திரும்பியதும் அவனுடன் போய்விடுகிறாள். இது எஸ்கிமோ ஜாதியினரிடமிருக்கும் நீண்ட கால வழக்கம். இது தீய வழக்கமென்றோ, அன்றி ஒழுக்கக் குறைவென்றோ நீக்கிரோவர் நினைப்பதில்லை.

### தற்கொலை

தற்கொலை செய்து கொள்வதும் எஸ்கிமோ ஜாதியினருக்கு தீய வழக்கமாகத் தோன்றவில்லை. ஆனால் அவர்கள் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டோ அன்றி செய்த குற்றத்திற்குக் கிடைக்கும் தண்டனைக்கு அஞ்சியோ தற்கொலை செய்து கொள்வதில்லை. ஒரு எஸ்கிமோ நோயுறுகிறான். இனி அவன் பிழைப்பது கஷ்டமெனத் தெரிந்ததும், அவன் தற்கொலை செய்து கொண்டு செத்துவிட அனுமதித்துவிடுகிறார்கள். எப்படியும் இவன் செத்தாக வேண்டும், அதற்கு கௌரவமான வழி தற்கொலைதான் என்று கருதுகிறார்கள்.

பனிப் பாறைகளில், எங்கும் குளிர்மயமாயிருக்குமிடத்தில் ஆகாராதிகளுக்காக வேட்டையாடுவது மிகக் கஷ்டம். பல தினங்கள் வேட்டையாடினாலும் சில சமயங்களில் எதுவும் கிடைப்பதில்லை. பிறகு உணவுக்கு என்ன செய்வது?

### உணவின்றி சாவு

கிழவர்கள் இன்றில்லாவிடினும் இன்னும் கொஞ்ச நாட்களில் சாக வேண்டியவர்கள். அவர்களும் உயிருடனிருப்பதாயிருந்தால், கையிலிருக்கும் உணவும் மற்றவர்களுக்குப்போதாமல்போய்விடும். ஆகையால் கிழவர்களைத் தானே உணவின்றி செத்துவிடும்படி விட்டு விடுகிறார்கள்.

வீட்டிலுள்ள கிழத்தாய்தான் முதலில் சாகத் துணிந்து, வீட்டிலிருக்கும் கொஞ்ச ஆகாரத்தை மற்ற இளைஞர்கள் புசித்து வாழ அனுமதிப்பது வழக்கம்.

### கிழவரைக் கொல்லுகின்றனர்

உடனே நல்ல வேட்டை கிடைக்குமிடத்திற்குப் போக எல்லாவற்றையும் கட்டி எடுத்துக்கொண்டு புறப்படும்படி ஆண்கள் பெண்களுக்கு ஆக்ஞாபிக்கிறார்கள். பனிக்கட்டிக் குடிசையை உடனே காலிசெய்து விடுகின்றனர்.

பிறகு கிழவர்களை உள்ளே போட்டு வாசலிலும் பனிச்சுவர் எழுப்பி விடுகின்றனர். இக்கிழவர்களுக்கு அவர்களுடைய கம்பளிச்சட்டையையும், சிறிது உணவையும், தீபத்தையும் கொடுக்கின்றனர்.

பின்னர் கிழவர்கள் உள்ளேயிருந்தே நாளாவட்டத்தில் சாக விட்டுவிட்டு மற்றவர்கள் வேறு இடத்திற்குக் குடிபோய் விடுகிறார்கள்.

### ஆகாரம் கிடைத்தால்?

இப்படிப் போகிறவர்களுக்கு சமீபத்திலேயே ஆகாரம் கிடைத்துவிடுமாகில் உடனே திரும்பி அடைக்கப்பட்டுக் கிடக்கும் கிழவர்களைக் காப்பாற்றி விடுகின்றனர். இக்கிழவர்களின் புத்திரர்களுக்கு ஆகாரம் கிடைத்தால், இவர்கள்தான் தங்கள் பெற்றோர்களைக் காக்க முதலில் விரைந்தோடுகிறார்கள்.

எஸ்கிமோ ஜாதியினர் வசிக்குமிடங்களில் சில இடங்களில் [illegible] ஒவ்வோர் ஆணுக்கும் பல மனைவிகள். பலதார மணம் கூடாதென்றாலும் அதிகப்படியாயிருக்கும் பெண்களை என்ன செய்வது? இவர்களும் உயிர்வாழ்ந்து, அதற்கு வேண்டிய ஆகாராதிகளைத் தேடித்தரும் புருஷர்களை அடையவேண்டாமா?

### ஒரு பெண்ணுக்கு 3 புருஷர்

சில பாகங்களில் பெண்கள் மிகக் குறைவாயிருக்கிறார்கள். அங்கு மேற்கண்டதிற்கு மாறுபட்ட நிலைமையிருக்கிறது. ஒரு பெண்ணுக்கு 2 அல்லது 3 புருஷர்களுமிருக்கலாம். எல்லோரும் ஒரே வீட்டில்தான் வசிக்கிறார்கள். ஒவ்வோர் ஆணுக்கும் மனைவி அவசியமாகிறது. போதிய பெண்களில்லாவிட்டால் ஒரே பெண்ணுக்குப் பல புருஷரிருப்பதைவிட வேறு வழிதான் என்ன?

---

## பதவி விட்டார்!

லால்குடி தாலுக்கா மணக்கால்பஞ்சாயத்துபோர்டு தலைவர் தோழர் எம்.கே. ராமசாமி திருச்சி மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க சென்னை மாகாண விடுவிக்கப்பட்ட கைதிகளின் உதவிக்கமிட்டி அங்கத்தினர், தாலுக்கா சிப்பாய் கமிட்டி காரியதரிசி, லால்குடி சப் ஜெயில் விசிட்டர் ஆகிய பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டதை மகிழ்ச்சியோடு அறிவித்துக்கொள்கிறார்.

## பள்ளிகள் பாசறைகளாகின்றன

13-11-45ல் நாகை தேசிய உயர்நிலைப் பள்ளி மாணவர் தமிழ்க் கழகச் சார்பில் தலைமை ஆசிரியர் தோழர் ஆர். கோபாலய்யர் பி. ஏ., எல். டி., தலைமையில் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., 'தோழமை' என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்.

19-11-45 மாலை மதுரை அமெரிக்கன் கல்லூரி பரிமேலழகர் கழகத்தின் ஆதரவில் கல்லூரி ஆசிரியர் தோழர் இராமானுச அய்யங்கார் தலைமையில் தோழர் அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) 'கலையும் வாழ்வும்' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்.

22-11-45 மாலை சென்னை இன்ஜினீயரிங் கல்லூரி தமிழர் மன்றத்தில் தோழர் அன்பழகன் பி.ஏ., (ஆனர்ஸ்) மறுமலர்ச்சி என்னும் தலைப்பில் பேசினார்.

## P. R. சாமிநாதனுக்கு ஒருவருட கடுங்காவல் தண்டனை

பட்டுக்கோட்டை ராம ஜனமடத்தில் நடத்தப்பட்ட ஸ்ரீ ராம நவமி உற்சவத்தில் 23-4-45ந் தேதி கிளர்ச்சி செய்ததாக இவ்வூர் சு. ம. இயக்கத் தோழரும், இந்தி எதிர்ப்பில் சிறைசென்றவருமான தோழர் பி ஆர். சாமிநாதன் மீது இவ்வூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரால் இ. பி. கோ. 296, 298, 504. செக்ஷன்கள்படி அதாவது [296] மதசம்பந்தமாக தொழுவதற்கும் உற்சவங்கள் நடத்துவதற்கும், சட்டப்பூர்வமாக உரிமையுடன் கூட்டப்பட்ட கூட்டங்களில் தானாகவே குழப்பம் செய்ததாகவும், (298) ஒருவருடைய மத உணர்ச்சியை வேண்டுமென்றே புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்கள் காதுக்கு எட்டும்படியாக வார்த்தையோ சத்தத்தையோ அல்லது அவர்கள் கண் பார்வை படும்படியாக பலவித பாவனைகள் செய்ததாகவும், (504) விளைவு சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் என்றும், அல்லது வேறு குற்றங்கள் செய்யத் தூண்டுமென்றும் தெரிந்திருந்தே, அவ்விதமான செய்கைகளை வேண்டுமென்றே செய்து தூண்டியதாகவும், குற்றம் சாட்டி, இவ்வூர் சப் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் தொடரப்பட்டிருந்த வழக்கில் சப்மாஜிஸ்திரேட்டு அவர்கள் எதிரியை (பி. ஆர். சாமிநாதனை) குற்றவாளி எனக் கண்டு எதிரிக்கு ஒவ்வொரு செக்ஷனுக்கும் 4 மாத கடுங்காவல் தண்டனை வீதம் 3 செக்ஷனுக்கு தனித்தனியே தண்டனை கொடுத்து தண்டனையைத் தொடர்ந்து அனுபவிக்க வேண்டுமென்றும் 16-11-45-ல் தீர்ப்புக் கூறினார்.

17-11-45-ல் பட்டுக்கோட்டை டிப்டி கலெக்டர் மூன்பு அப்பீல் தாக்கல் செய்யப்பட்டு தோழர் பி. ஆர். சாமிநாதன் ஜாமீனில் அழைத்து வரப்பட்டுள்ளார் என்றும், பட்டுக்கோட்டை சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி தோழர் எஸ். பாப்பையன் அவர்கள் தெரிவிக்கிறார்.

## திருவாரூரில்!

திருவாரூர் திராவிடர் கழகத்தின் சார்பில் 25-11-45 மாலை விசயபுரத்தில் தோழர். எஸ். கே சாமி தலைமையில் மாபெரும் கூட்டம் கூடிற்று. "தமிழர் கடமை" என்பது பற்றி தோழர் காவலர் சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்., மு. கருணாநிதி. எஸ். கருணானந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். 'கிருஷ்ணன், பாகவதருக்குக் கருணை காட்டுக' என்ற தீர்மானம் தோழர் வி. எஸ். பி. யாகூப்பால் கொண்டுவரப்பட்டு மு. கருணாநிதி வழிமொழிய, ஆதரிக்கப்பட்டது. தோழர் வி. ஜி. ரெங்கராசு நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

### மதிப்புரை

**"சினிமா நிலையம்" பெங்களூர்**

தோழர் வி. பிச்சையன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட சினிமா நிலையம் ஆண்டு மலர் வரப்பெற்றோம். மறுமலர்ச்சிக் கட்டுரைகள்—கவிதைகள் பல காணப்படுகின்றன. தமிழ் மணிகள் கிருஷ்ணன் பாகவதரைப் பற்றி தீட்டப்பட்டுள்ள தலையங்கம் உண்மைக் கலை உலகத்தின் உணர்ச்சியோடு பின்னிய கதறலாகும். மலரின் விலை ரூபாய் 1-8-0!

**"தொழிலாளர் மித்திரன்" புதுவை**

ஆசிரியர்: காஞ்சி கல்யாணசுந்தரம். திராவிடத் தொழிலாளருக்கென புதுவையிலிருந்து வெளிவரும் தொழிலாளர் மித்திரன் கிழமை இதழுக்கு இரண்டாவது ஆண்டு துவக்குகிறது. இரண்டாம் ஆண்டின் முதற்பால் சிறந்த முறையில் வெளி வந்துள்ளது. இம்முறையில் மித்திரன் மிளிர்க என வாழ்த்துகிறோம்.

### மறைவு

ஈரோடு பிரபல டாக்டரும் நமதியக்கத் தோழருமான டாக்டர் V. I. டேவிட் அவர்கள் இயற்கையெய்தியது குறித்து இயக்க அன்பர்கள் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.


## தேவை

ஆங்கிலம், தமிழ் கற்றவரும், டைப்ரைட்டிங், இங்கிலீஷ் கரஸ்பாண்டன்ஸ், இவைகளில் தேர்ச்சியுள்ளவரும் வரவு செலவு கடை கணக்குகள் எழுத பழக்கமுள்ளவரும், ஆகிய திராவிட இளைஞரொருவர் எங்கள் இங்கிலீஷ் மருந்து கடையில் குமாஸ்தா வேலை பார்க்கத் தேவை. தகுதிக்குத் தக்கவாறு சம்பளம் கொடுக்கப்படும். விருப்பமுள்ளோர் விண்ணப்பம் அனுப்பவும்.

The Drug House (Chemists & Druggists)
Post Box No. 535
103 Nainiappa Naick Street,
Park Town, MADRAS.



GURU

போரில் வெற்றி!
எனவே
சமாதான கால தேவைகளிலும்
வெற்றி வேண்டும்.
ஆகையால்

# குரு மருந்துகள்

இனி உங்கள் தேவைக்குக் கிடைக்கலாம்.

முக்கிய தயாரிப்புகள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| குரு தைலம் (210 வியாதிகளுக்கு) | 1—8—0 |
| குரு பல்பொடி (தந்தரோகங்களுக்கும்) | 0—5—0 |
| குரு களிம்பு (பத்து, படைகளுக்கு) | 0—14—0 |
| குரு ஆயுர்வேத லேகியம் | 2—0—0 |
| குரு ஆஸ்தமா டிராப்ஸ் (இருமல் காசங்களுக்கு) | 2—0—0 |
| குரு தாதுவிருத்தி மருந்து (வாலிப-வயோதிகர்களுக்கும்) | 5—0—0 |
| குரு சந்தான சோர்ணம் (ஸ்திரீகள் சகல கர்ப்ப நோய்களுக்கும்) | 5—0—0 |
| குரு குழந்தை செட் (CHILDREN SET) (குழந்தைநோய்-பாதுகாப்புக்கும்) | 8—10—0 |

## குரு மருந்துகள் குடும்ப பொக்கிஷம்

உங்கள் ஊர் மருந்து—ஷாப்கடைகளில் கேளுங்கள்.
இல்லாவிடில்

டாக்டர்
எ. மதுரம் சன்ஸ்,
குரு மருந்து சாலை...........
திருச்சினாப்பள்ளி (S. I.)


ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## நடக்க இருப்பவை!

● 2-12-45 ஞாயிறு மாலை 5-மணிக்கு கரந்தை திராவிட வாலிபர் கழக கட்டிடத்தில் முதல் ஆண்டு வரவு செலவு கணக்கு பரிசீலனை செய்யப்பட்டு புது நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்படும். தாலுக்கா கமிட்டி நிர்வாகம் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும். அங்கத்தினர்களும் தோழர்களும் வருமாறு தஞ்சை திராவிட வாலிபர் கழக செயலாளர் தோழர் என். எஸ். சண்முக வடிவேலு வேண்டுகிறார்.

● 4-12-45 செவ்வாய் மாலை 6-மணிக்கு பொன்மலை திராவிட வாலிபர் கழக தோட்டத்தில் தோழர் ஜி. பராங்குசம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் தோழர்கள் டி. கே. சீனிவாசன், எ. கே. பாட்சா, புலவர் குழந்தையா ஆகியோர் 'பொதுவுடைமையும் சுயமரியாதையும்', 'நாம் கோருவது என்ன?', 'பழமையும் புதுமையும்' என்பனபற்றிப் பேசுவார்கள்.

● சென்னை சுயமரியாதை மாநாட்டு வரவேற்புக் கூட்டம் 5-12-45 புதன் மாலை 6 மணிக்கு பார்க்டவுன் பொம்மு செட்டித் தெரு 11-வது மாடியில் நடைபெறும்.

● 5-12-45 புதன் மாலை 6-மணிக்கு பெரியார் அவர்கள் தலைமையில் பொன்மலை D 32 நெ பிளாக் 7 நெ வீட்டில் செல்ல மாணிக்கம் பங்கயற்செல்வி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். வருக அனைவரும்!

● 9-12-45, ஞாயிறன்று மாயவரம் குற்றாலத்தில் தஞ்சை மாவட்ட இசை வேளாளர் இளைஞர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். பல முக்கியமான செய்திகள் பற்றி யோசிக்கப்படும். வருக இளைஞரே!

### பொள்ளாச்சி மாநாடு

16-12-45-ல் பொள்ளாச்சியில் நிகழ இருந்த கோவை மாவட்ட திராவிடர் கழக 6-வது மாநாடு, சென்னையில் நடைபெறும் மாநாடு, நாடகங்களை முன்னிட்டு 23-12-45-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என தோழர் பி. என். இராமானுசம் அறிவிக்கிறார்.

## குண்டு வீச்சு!

### வீட்டுக்கோரு பிள்ளை!

கும்பகோணம் தோழர் ஆராவமுதய்யங்கார் காங்கரசிலிருந்து விலகிவிட்டதாகவும் தான் விலகுவதற்குக் காரணம், காங்கரசில் பிராமணர் பிராமணரல்லாதார் பிரச்சினை தற்சமயம் அதிகமாக இருப்பதாகும் இந்த நிலையில் காங்கரசிலிருந்துகொண்டு பிராமணர்கள் வேலை செய்ய முடியாதென்றும் கமிட்டித் தலைவருக்குக் கடிதம் எழுதியுள்ளாராம்.

பரம்பரை கௌரவத்தைக் காப்பாற்ற ஆச்சாரியார் கேட்ட வீட்டுக்கொரு பிள்ளை கோஷ்டியில் அய்யங்கார் சேரலாமென நினைத்திருப்பார். எப்படி இருந்தாலும் அய்யங்காரின் இன உணர்ச்சியைப் பாராட்டவேண்டியது தானே!

### காந்திக்கு ஜே!

கோலாப்பூரில், குமார் அஷ்டேகர் என்ற சிறுவன் 'காந்திக்குஜே' என்று சொல்ல மறுத்ததின் காரணமாக காங்கரஸ் தியாகிகளால் தாக்கப்பட்டு உயிர் விட்டானாம். அஹிம்சா மூர்த்தியின் மேல் உள்ள அளவு கடந்த பக்தியினால் கொலை செய்வதும் குற்றமாகாது என அந்த ஈறிபத்த நாயனார்கள் நினைத்திருக்கலாம்.

### வருண ஜெபம்!

மைசூர் சமஸ்தானத்தில் மழையில்லை என்பதற்காக பார்ப்பனர்கள் நீரில் நின்று 'வருண ஜெபம்' செய்கிறார்களாம். இதைப் படமெடுத்துப் பத்திரிகைகள் பிரசுரிக்கின்றன.

மாஸ்கோ வட்டாரத்தில் மேகத்தை யிழுத்து மழையைப் பெய்யச் செய்கிறார்கள். இங்கு மைசூரில் ஜெபம் நடக்கிறது. இது அக்கினி யாஸ்திர காலமல்ல, அணுகுண்டு காலம் என்பதை அந்த மேதாவிகள் உணர்ந்தால் தானே பாபம்! 'விமானி'

### விருதையில் பெரியார்!

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நவம்பர் 21ம் தேதி குற்றாலத்திற்குப் போகும்பொழுது விருதுநகர் ரயில்வே நிலையத்தில் விருதைப் பொதுமக்கள் மாபெரும் வரவேற்பளித்து மாலைகள் அணிவித்தனர். பெரியார் வண்டியை விட்டு இறங்கிவந்து நன்றி கூறும் போது, கறுப்பு சட்டைப்படையின் அவசியத்தைப் பற்றியும் இளைஞர்கள் திராவிட நாட்டிற்கென செய்யவேண்டிய தொண்டைப் பற்றியும் விளக்கியதோடு இருக்கின்ற இரண்டொரு பிராமணர்களும் ஒழிந்தால் காங்கரஸ் நம் வழிக்கு வந்துவிடும் என்றும் கூறினார்.


கடல்கடந்த நாடுகளில் குடியேறும்வேலை-வெற்றிக்காக போரிடுவதைவிட மிகக் கடினமாக இருக்கும்

**மே. த. கவர்னரின்**

சௌகரியங்கள்—கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு மென்மேலும் நன்கொடை கொடுத்துதவுமாறு உருக்கமாக வேண்டுகோள் விடுகிறது.

ஏனென்றால்

இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளுக்கு சௌகரியங்கள் மிகமிக அவசியமாக தேவைப்படுகின்றன.

★

எனவே

ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லேன் பீச், சென்னை, என்ற விலாசத்துக்கு தயவு செய்து பணம் அனுப்பி கொடுக்கவும்.

# குடி அரசு

1945-வருடு டிசம்பர் மீ 1-உ

## சென்னையில்

டிசம்பர் மாதம் 15, 16ந் தேதி சனி ஞாயிறு கிழமைகளில் சென்னையில் நடக்கும் சு. ம. மாநாடு, சிவாஜி நாடகம் ஆகியவைகளை ஒட்டி நம் ஜஸ்டிஸ்கட்சி நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அக்கூட்டத்தில் கட்சியின் ஒரு வருஷ வேலைத்திட்டம் வகுக்கப்பட்டு முறையே வேலை துவக்கம் நடைபெற வழிசெய்யப்படும். ஆகவே நிர்வாகசபை அங்கத்தினர்கள் யாவரும் தவறாமல் வரவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

மற்றும் சுயமரியாதை இயக்கக் கூட்டமும், கறுப்பு சட்டைப் படை கூட்டமும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மாணவர் பிரசாரக் கூட்டமும் நடைபெறும். இவை தவிர தோழர்கள் கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை முயற்சிக் கூட்டமும் நடைபெறும். இப்படியாக பல காரியங்கள் சென்னையில் டிசம்பர் 16ந் தேதி தொடங்கி 3, 4 நாட்கள் நடைபெறக்கூடும்.

இவை முக்கியமான கூட்டங்கள் ஆனதால் திராவிடநாட்டில் ஆங்காங்குள்ள இயக்கத் தோழர்கள் வந்திருந்து நடவடிக்கைகளில் கலந்து அவரவர்களுடைய யோசனைகளையும் ஆதரவுகளையும் அளிக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

சட்டசபைகள் தேர்தல் (எலக்ஷன்) சம்மந்தமான தொல்லை நம் கட்சிக்கு இல்லாமல் போனது பெரியதொரு வசதியானாலும் அவ்வசதியை நாம் சரியானபடி பயன்படுத்திக்கொள்வது அறிவுடைமையாகும்.

இந்நாட்டில் உள்ள பிரபல பொது ஸ்தாபனங்களும், பிரபல பொது மக்களும், செல்வாக்குள்ள கருத்துக்களும், அவைபற்றிய நடைமுறைகளும்யாவும் நமக்கு இன்று எதிர்ப்பாக இருக்கின்றன. என்றாலும் நம் இயக்கத்தின் நிலை இதுவரை இருந்து வந்ததைவிட இப்போது பெரிதும் மதிப்பும் செல்வாக்கு முடையதாக இருந்து வருவதை நம் எதிரிகளே ஒப்புக்கொள்ளுகிறார்கள். அன்றியும் நம் இயக்கம் பல காரணங்களால் வடிகட்டப்பட்டு பரிசுத்தமடைந்திருப்பதானது இன்று எவராலும் பாராட்டப் படுகிறதைப் பார்த்தும் கேட்டும் வருகிறோம். மற்றும் என்றுமில்லாத அளவுக்கு இளைஞர்கள், மாணவர்கள் நம் இயக்கத்தில் உள்ள பெரிய ஆட்கள் என்பவர்களின் வீட்டில் உள்ள பெண்மணிகள், சிறுவர்கள் ஆகியவர்களிடையே உற்சாகமும், உழைப்பும், கூட்டுறவும் இருந்து வருகின்றதை ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு காரியத்திலும் கண்டு அனுபவித்து வருகிறோம்.

இவை தவிர நமது இயக்கக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு என்பது எங்குமே காண்பதற்கு அரிதாயிருக்கிறதுடன் நம் கொள்கைகள் நாட்டில் எந்தகட்சி மக்களாலும் மதிக்கத்தக்க அளவுக்கு உரிமைபெற்று வருகின்றன.

மக்கள் பிறவியில் ஜாதிபேதம் பாராட்டுவது, பெரியஜாதியர் என்பவர்களுக்குள்ளும் ஏதோ ஒரு மூடநம்பிக்கை சடங்குபோல் பாவிக்கப்படுகிறதோடு கடுகளவு அறிவுடையவன் என்று சொல்லிக்கொள்ள வேண்டிய எவரும் ஜாதி பேதம் காட்டவோ, பேசவோ வெட்கப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. கோவில், குளம், உற்சவம் என்பவைகளுக்கும் அவற்றால் பிழைக்கவேண்டியவர்களாலும், அவற்றால் பெருமை அடைய வேண்டியவர்களாலும்தான் நாட்டில்செல்வாக்கு இருந்து வருகிறதே தவிர அறிவாளிகளாலும்பொதுபாமரமக்களாலும் மதிக்கப்படுவதற்கில்லாமல் அவற்றின் பெருமைகள் மறைந்து வருகின்றன. நம் பெண் மக்களுக்கும், பாமர மக்களுக்கும் வேடிக்கைக் காட்சியாகவும், உல்லாசப் பிரயாணமாகவும், வேறு ஏதாவது ஸ்தாபனம், கூட்டம், போக்குவரவுக்கு இடம் ஆகியவை இருக்குமானால் கோவில், ஸ்தலம், உற்சவம் ஆகியவை பெரிதும் மறைந்துவிடும் என்றே சொல்லலாம்.

இதுபோலவே தான் சுதந்தரம், சுபராஜ்ஜியம், தேசியம் என்பனவாகியவற்றின் தன்மையும்'சுவாமியின்' பெருமையை அர்ச்சகர் எடுத்துச் சொல்லுவது போல் அக்காரியங்களில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையின் பெரும் பாகத்தையும், பொறுப்பையும் அவற்றின் மூலம் வைத்துக்கொண்டவர்களால் நடத்தப்படும் காரியங்களாலும், அவற்றிற்கு ஆக் ஏற்படுத்தப்பட்டு பலப்படுத்திக் கொண்ட ஸ்தாபனங்களாலும், பத்திரிக்கைகளாலுமல்லாமல் மற்றவர்களுக்கு அந்தக் காரியங்களிடம் கவலையும், லட்சியமும் இல்லாமல் போய்விட்டது.

தேர்தல்களும், பதவிகளும் கூட அவற்றின் மீது மூடப்பட்டிருந்த பொதுநலம் என்னும் போர்வை எடுபட்டு ஒரு பணக்காரனை அவனிடம் பணம் பெறுபவன் மதிப்பது போல் தேர்தல், பதவி உள்ளவனை அவனிடம் பயன்பெறுபவன் தவிர மற்றெவனுமே மதிப்பதற்கில்லாமலும், தேர்தல்கள் பற்றி வேறு எவரும் சிந்திப்பதற்கில்லாமலும் இருக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டன.

பொதுநலத்தில் ஈடுபட்டவர்கள் என்கின்றவர்கள் தன்மைகளும் வியாபாரத்தில் ஈடுபட்டவர் பணம், பெருமை தேடுவதில் ஈடுபட்டவர் எப்படி மதிக்கப்படுகிறார்களோ அதுபோல தான் இவர்களும் மதிக்கப்பட வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

இனி பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயமும் அதன் கடைசி எல்லைக்கு வேகமாய் போய்க்கொண்டிருக்கிறது என்றே சொல்லலாம். ஜாதியினால் பார்ப்பனன் பெரியவன் என்பது 100-க்கு 90 பாகம் மறைந்தே போய்விட்டது என்றாலும் இன்று பார்ப்பான் காரியத்தில் பெரியவனாய் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமை, தந்திரம்; முயற்சி, வன்னெஞ்சம், ஒருவருக்கொருவர் தங்களவர்களைக் கண்மூடித்தனமாக ஆதரிப்பது என்கின்ற குணங்கள் என்பதோடு வெள்ளையனுக்கு உண்மையான உள் ஆளாயிருந்து நம்மைக் காட்டிக்கொடுத்து அவனது பூரண நம்பிக்கை பெற்றிருப்பது என்பதல்லாமல் பார்ப்பன

ரோஜா முத்தையா

ருக்கு வேறுவித மதிப்பு அடியோடு இல்லாமல் போய்விட்டது.

இதுவே இன்று நாம் காணும் நிலைமையாகும். இந்த நிலைகளில் ஒரு பகுதியாவது உண்மையாய் இருக்குமானால் இதற்காக மகிழ்ச்சியும் பெருமையும் அடைய வேண்டியவர்கள் இந்த நாட்டில் நம்மைத் தவிர (நம் இயக்கத்தைத் தவிர) வேறுயார் இருக்க முடியும்? என்று கேட்கிறோம். ஏனெனில் இந்தப்படி ஆகவேண்டும் என்கின்ற ஆசையும், அதற்கு வேண்டிய கொள்கைகளும், திட்டங்களும் நம் இயக்கத்தில் இல்லாமல் வேறு யாரிடம், இதுவரை வேறு எந்த இயக்கத்தினரிடம் இருந்தது என்று கேட்கிறோம்.

அதனால்தான் "இந்த நாட்டில் உள்ள பிரபல பொது ஸ்தாபனங்களும், பிரபல பொது மக்களும், செல்வாக்குள்ள கருத்துக்களும், அவை பற்றிய நடைமுறைகளும் யாவும் நமக்கு எதிர்பாக இருக்கின்றன" என்று நாம் மேலே சொன்ன வாக்கியத்தின்படி நாம் அவைகளுக்கு விரோதிகளாய் இருந்து தொண்டாற்றி வந்திருக்கும் தொண்டின் பயன் என்று மகிழ்ச்சிகொள்ளுகிறோம். மதம் இன்று சந்தி சிரிக்கிறது. மாமாங்கம் முதலிய மத சம்மந்தமான உற்சவங்கள் மூத்திரக்குழி உற்சவங்களாய் விளங்கினதோடு இன்று அவை பெரிதும் புதுப் பணக்காரர்களையும் கீழ் நிலை மக்களையும் மாத்திரமே தஞ்சமடைகின்றன. தீபாவளி போன்ற பிரபல பண்டிகைகள் பதினாயிரக் கணக்கான மக்களால் வெறுக்கப்பட்டு பஹிஷ்கரிக்கப்பட்டு கொடும்பாவி கட்டி இழுக்கப்பட்டு கொளுத்தப்படுகின்றன. பண்டார சன்னதிகள், சங்கராச்சாரிகள், திருட்டு கார்ப்பவதிகள் போல் வெட்கப்பட்டு வெட்கமும் துயரமும் கலந்த ஜீவன்களாய் நடமாடத் தகுந்த நிலையில் வாழ்கிறார்கள். மதம், உற்சவம், பண்டிகை, மதப்பிரசாரகர், சமுதாய நிலை, அரசியல் ஏமாற்றம் முதலிய இன்றைய மக்களை ஏமாற்றி மடையர்களாக்கி கட்சிக்காரர்களால் சுரண்ட வசதியாய் இருக்கும் சாதனங்கள் இன்று ஆட்டம் கொடுத்து நிலைகுலைந்து சாய்ந்து விழப்போகும் நிலையை அடைந்திருப்பதால் நாம் எவ்வித சலிப்போ அவநம்பிக்கையோ கொள்ளுவதற்கு இடமில்லாமலிருக்கிறோம்.

ஆதலால் இந்த சமயத்தை நாம் அலட்சியமாய்க் கருதி நழுவவிட்டு விட்டோமானால் இதுவரை பட்டபாடு வீணாவதோடு நம் பின் சந்ததிகளுக்கு வேலையும் சங்கடமும் அதிகமாகிவிடும் என்பதை எச்சரிக்கிறோம். எனவே சென்னை கூட்டத்திற்கு இயக்க அன்பர்களும் கவலை ஆளர்களும் தொண்டர்களும் அவசியம் வந்து குறைந்தது ஒரு வருஷத் திட்டமாவது போட்டு ஒரு நல்ல வேலையைத் துவக்க வழி செய்து கொண்டு போக வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

---

# கறுப்பு சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கறுப்பு சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப்படுவார்கள். பெண்களும் சேரலாம். ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

| | |
|---|---|
| ஊர் | படிப்பு அளவு |
| பெயர் | வயது |
| தந்தை பெயர் | தமது தகுதித்தன்மை |

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத், S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்,
42, கச்சேரி வீதி, ஈரோடு.

---

## சென்னை மேயர்!

ராவ்பகதூர் என். சிவராஜ் அவர்கள் சென்னை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். தோழர் சிவராஜ் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர். தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மைக்காகப் பாடுபடக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்களில் ஒருவர். சேரிகளை சீர்படுத்துவதிலும், ஏழைகள் இன்ப வாழ்வு நடத்துவதிலும் தோழருக்கு அக்கரையுண்டு. சென்னை வாசிகளுக்கு இது ஒரு நல்ல வாய்ப்புதான்!

வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தின் நலனை அனுபவிக்கப்போகிறார்கள் தாழ்த்தப்பட்டோர். நமது பாராட்டுதல் தோழர்சிவராஜுக்கு உரியதாகுக!

---

## வடஆற்காடு மாவட்ட தோழர்களுக்கு வேண்டுகோள்

